(4) நடைமுறைக் கேள்விகள் (தொடர்ச்சி)

(இ) ஓர் உறுப்பினர் பேசும்போது அமைச்சர்கள் அடிக்கடி குறுக்கிடுவது குறித்து.

திரு. கே. ஏ. மதியழகன்: Sir, On a point of order. Is it correct to interrupt a member while she is speaking? ஏதோ தங்களுக்குத்தான் விவரம் புரிந்தமாதிரி மந்திரிகள் பத்திரிகையைக் காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அவரை உட்காரச் சொல்கிறீர்களா, இல்லையா? பாயின்ட் ஆப் ஆர்டரில் நிற்கிறேன் நான். யாரோ ஒரு மெம்பர் பேசும்பொழுது, ஒரு மந்திரி டி. ஏ. பாய் பேசுகிறார் என்கிறார், மற்றொருவர் பத்திரிகையைக் காண்பிக்கிறார். மந்திரிகள் ஏதோ விவாதிக்கிறார்கள், அவர்களுக்குத்தான் தெரிந்த மாதிரி, மற்றவர்களுக்குத் தெரியாத மாதிரி. ஒரு மெம்பர் பேசிக் கொண்டிருக்கிறார் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஒரு உறுப்பினர் பேசும்பொழுது அமைச்சரோ, மற்றவர்களோ எழுந்தால் அந்த உறுப்பினர் அதற்கு இணங்கி உட்கார்ந்து விட்டால் மற்றவர்கள் பேசலாம். அதுதான் வழக்கம். மாண்புமிகு அமைச்சர் இராசாராம் அவர்கள் பேச எழுந்தபொழுது, அம்மையார் அவர்கள், அவர் பேசுவதற்கு இடம் அளித்து அமர்ந்து விட்டார்கள். ஆகவே, அமைச்சர் இராசாராம் பேசுகிறார்.

திரு. கே. ஏ. மதியழகன்: I am raising a point of order, Sir. பேரவைத் தலைவர் அவர்கள் பதில் சொல்லட்டும். முதலமைச்சர் ஏன் பதில் சொல்லவேண்டும்? ஒவ்வொரு மெம்பருக்கும் பேசுவதற்கு உரிமையுண்டு. அமைச்சரைப் பேச வேண்டாமென்று சொல்லவில்லை. விவாதத்திலே பங்கெடுத்துக் கொள்ளலாம். ஆனால். அம்மையார் பேசும்பொழுது ஒவ்வொரு வரிக்கும் குறுக்கிடுவதுதான் முறையா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுக்கிடே கூடாது என்கிறீர்களா?

திரு. கே. ஏ. மதியழகன்: அமைச்சர்கள் இதை வழக்கமாக வைத்துவிட்டார்கள். இராசாராமுக்குத் தெரிந்தது அம்மையாருக்குத் தெரியாதா? பாய் பேசியது அவருக்குத் தெரியாதா? நான் இந்த மன்றத்தினுடைய முறையைப் பற்றி கேட்கிறேன்.

1973 ஆகஸ்ட் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுக்கீடு கூடாது என்று சொல்கிறீர்களா ?

திரு. கே. ஏ. மதியழகன் : கூடாது என்று சொல்லவில்லை. ஒரு சட்டப் பிரச்சினை வருகிறபோது அவர்கள் குறுக்கிடட்டும். உணவைப் பற்றிப் பேசும்போது உணவு அமைச்சர் குறுக்கிட்டு பங்கேற்கட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுக்கீடு கூடாது என்கிறீர்கள், அப்படித்தானே ?

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த விவகாரத்திற்குப் பதில் சொல்லாமல் இருக்கிறீர்களே. நான் தெளிவாகக் கேட்கிறேன், ஒரு உறுப்பினர் பேசுகிறபொழுது, பாயின்ட் ஆப் ஆர்டரில், பாயின்ட் ஆப் கிளாரிஃபிகேஷனிலே வேண்டுமானால் தலையீடில்லாமலே, விவகாரத்தைச் சொல்வதற்கு இதை விளக்குங்கள் என்று அம்மையாரைக் கேட்கலாம். ஏதாவது தவருக இருந்தால் குறுக்கிடலாம். எதையும் சொல்வதற்கு அமைச்சர்களுக்குப் போதுமான வாய்ப்பு இருக்கிறது. என்னுடைய பாயின்ட் ஆப் ஆர்டருக்குப் பதில் சொல்லிவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டரை. . .

திரு. கே. ஏ. மதியழகன் : பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குத்தான் பதில் சொல்கிறேன் . . . .

திரு. கே. டி. கே. தங்கமணி : அமைச்சர்கள் தலையிடுவதைப் பொறுத்தவரையிலும் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. நான் எழுப்பக்கூடிய ஒரு விஷயத்தைப் பற்றி பின்னால் பதில் சொல்ல வேண்டும். நான் பேசிக் கொண்டிருக்கும்போதே அந்த பாயின்டை எடுத்துக்கொண்டு 5 நிமிஷம் அமைச்சர்கள் பதில் சொல்கின்ற முறை இந்த சட்டமன்றத்தில்தான் புதிதாக இருக்கிறது. தேவையானல், அந்தந்த அமைச்சர்களே பேசட்டும். அவர்களுக்கும் சந்தர்ப்பம் கொடுங்கள். சிப் மினிஸ்டர்தான் பதில் சொல்லவேண்டுமென்று அல்ல. விவாத காலத்திலே எந்தக் குறிப்பிட்ட இலாகாவைப்பற்றி அதிகமாக விவாதத்திலே வந்ததோ, அதைப்பற்றி அவர்கள் பேசட்டும். மற்ற இடங்களிலே,

அமைச்சர்கள் பேசும்போது நாங்கள் தலையிட்டு கிளாரிஃபிகேஷன் கேட்போம். இங்கு மெம்பர்கள் பேசும்பொழுது அமைச்சர்களுடைய தலையீடு ஜாஸ்தியாக இருக்கிறது. தலையிட்டால்தான் விவாதம் ருசிகரமாக இருக்கும். அமைச்சர்கள் சொல்லவேண்டிய விஷயத்தை ஒரு பிரச்சாரமாக ஆக்கிவிடக் கூடாது என்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக இங்கே உள்ள எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் உறுதி அளிக்கிறோம், நீங்கள் தாராளமாகப் பேசலாம், நாங்கள் குறுக்கிட்டு உங்களுக்கு சங்கடத்தை விளைவிக்க மாட்டோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சபாநாயகர் அவர்களே, மிக்க நன்றி. (திரு. ஏ. ஆர். பெருமாள் எழுந்தார்) இப்பொழுது இவரே குறுக்கிடுகிறார்.

திரு. ஏ. ஆர். பெருமாள்: உறுப்பினர்கள் பேசிக்கொண்டிருக்கிறபொழுது அமைச்சர்கள் தலையிடுவதைப்பற்றிக் குறிப்பிட்டார். உறுப்பினர்கள் பேசும்பொழுது இன்னொரு உறுப்பினர் குறுக்கிட்டு சம்பந்தம் இல்லாமல் பேசுகிறார். நேற்றைய தினம் எங்கள் கட்சி உறுப்பினர் கந்தசாமி பேசும்பொழுது, சுப்பு அவர்கள் குறுக்கிட்டார். அவருடைய இணக்கம் இல்லாமலேயே குறுக்கிட்டார். இதுபோன்ற முறைகள் தடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நாங்கள் கருதியதெல்லாம் என்னதான் அமைச்சராக இருந்தாலும் அம்மையாரைப் போன்றவர்கள் நாங்கள் கூறுகின்ற பதில்களுக்கு, விளக்கங்களுக்குப் பதில் கொடுக்கக் கூடியவர்கள் என்ற வகையிலேதான் பதில் அளிக்கிறோம். கடுமையும் காரசாரமும் இல்லாமல், விவாதங்களிலே சூடும் சுவையும் இருக்கும், கேட்டுப் பெறுகின்ற விஷயங்களுக்குத் தெளிவு இருக்கும். நாங்கள் கொடுக்கின்ற பதில்களைச் சமாளிக்கின்ற ஆற்றல் இருக்கும் என்ற நம்பிக்கையில்தான் குறுக்கிடுகிறோம். அதைச் சமாளிக்கின்ற வகையில் ஆற்றல் இருப்பதாகக் கருதித்தான் குறுக்கிட்டோம். இப்பொழுது அவர்களே விளக்கிவிட்ட காரணத்தால் இனிமேல் குறுக்கிட மாட்டோம்.